**Tamilmanam International Research Journal of Tamil Studies**

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

https://tamilmanam.in/

*Article Type: Research Article*

# Utility and Cultural Significance of the Kodappu in the Life World of the Aayar Community of the Mullai Region

**N. Seenivasan*, Prof. Dr. S. Ravi[1],**

* Research Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur, Tamil Nadu, India.
[1]Research Guide, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur, Tamil Nadu, India.
* Correspondence: seenivasan.n1990@gmail.com; Tel.: +919791456319

**Received**: 22-12-2025; **Revised**: 25-12-2025; **Accepted**: 26-12-2025; **Published**: 01-12-2025

**Abstract:** This study examines the significance of the Kodappu in the life practices of the Aayar community associated with the Mullai landscape. Constructed using readily available natural materials such as bamboo poles, palm leaves, and fibers, the Kodappu functions as an indispensable structure in both the temporary and permanent living arrangements of the Aayars. In particular, the Pullinathu Aayars, including shepherds who rear goats, extensively use the kodappu for protecting livestock as well as for residential purposes.

In the Mullai landscape, where livestock rearing constitutes the primary occupation, the kodappu serves as a protective shield safeguarding animals from natural elements such as heat and rain, as well as from attacks by wild animals like dogs, foxes, tigers, and leopards. Its functions further extend to protecting young offspring, isolating sick animals, and facilitating feeding practices, thereby broadening its practical utility.

Moreover, for the nomadic Aayars who follow a migratory lifestyle, the kodappu provides a simple and efficient means of erecting temporary shelters to meet immediate residential needs. The use of the kodappu across various aspects of life—such as habitation, storage of goods, cooking, bathing, and ritual worship-reflects the nature-oriented life practices and traditional knowledge systems of the Aayar community. Thus, this study argues that the kodappu is not merely a structural form but also serves as a vital cultural symbol representing the identity and lived traditions of the Aayar community.

**Keywords:** Kodappu, Ayar Samoogam, Aattidaiyarkal, Valasai Vazhkkai, Paarambariya Kudiyiruppu, Naattar Kattidakkalai.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# முல்லை நில ஆயர் சமூகத்தின் வாழ்வியலில் கொடாப்பின் பயன்பாடும் பண்பாட்டு முக்கியத்துவமும்

*ந.சீனிவாசன், முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர், தமிழ்நாடு, இந்தியா.

[1] **பேரா. முனைவர் ச. இரவி**, நெறியாளர், தமிழ்த்துறை,

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர் , தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வு முல்லை நிலத்தோடு தொடர்புடைய ஆயர் சமூகத்தின் வாழ்வியலில் '**கொடாப்பு**' வகிக்கும் முக்கியத்துவத்தை ஆராய்கிறது. இயற்கையில் எளிதில் கிடைக்கும் கம்பு, ஓலை, நார் போன்ற பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் கொடாப்பு, ஆயர்களின் தற்காலிகமும் நிரந்தரமுமான வாழ்வில் இன்றியமையாத அமைப்பாக விளங்குகிறது. குறிப்பாக ஆட்டிடையர்கள் உள்ளிட்ட புல்லினத்து ஆயர்கள் கால்நடைகளைப் பாதுகாப்பதற்கும், குடியிருப்புத் தேவைகளுக்கும் கொடாப்பினைப் பெருமளவில் பயன்படுத்துகின்றனர்.

முல்லை நிலத்தின் முதன்மை தொழிலாகிய கால்நடை வளர்ப்பில் கொடாப்பு, வெயில், மழை போன்ற இயற்கை இடர்பாடுகளிலிருந்தும், புலி, சிறுத்தை போன்ற காட்டு விலங்குகளின் தாக்குதல்களிலிருந்தும் கால்நடைகளைப் பாதுகாக்கும் கவசமாக செயல்படுகிறது. மேலும் இளம் குட்டிகளைப் பாதுகாத்தல், நோயுற்ற கால்நடைகளைத் தனிமைப்படுத்தல், உணவளித்தல் போன்ற பல்வேறு பயன்பாடுகள் இதன் செயல்பாட்டை விரிவுபடுத்துகின்றன.

அத்துடன் வலசை வாழ்க்கை மேற்கொள்ளும் ஆயர்களின் குடியிருப்புத் தேவைகளுக்கு உடனடியாகக் குடிசை அமைக்க உதவும் எளிய கட்டுமானமாகவும் கொடாப்புப் பயன்படுகிறது. குடியிருப்பு, பொருள் சேமிப்பு, சமையல், குளியல், வழிபாடு என வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் கொடாப்பு பயன்படுவது, ஆயர் சமூகத்தின் இயற்கை சார்ந்த வாழ்வியலையும் பாரம்பரிய அறிவையும் வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் கொடாப்பு என்பது ஒரு கட்டுமானப் பொருள் மட்டுமல்லாமல், ஆயர் சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாகவும் விளங்குகிறது என்பதைக் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

**குறிச்சொற்கள் (Keywords)**

கொடாப்பு, ஆயர் சமூகம், ஆட்டிடையர்கள், வலசை வாழ்க்கை, பாரம்பரிய குடியிருப்பு, நாட்டார் கட்டிடக்கலை,

**முன்னுரை**

மக்களின் வாழ்க்கைத் தரம் உயர அடிப்படையாக அமைவது அவர்களின் தொழில்களே ஆகும். இயற்கையைச் சார்ந்து வாழ்ந்த ஐந்திணை மக்கள் அந்தந்த நிலத்திற்கேற்ற தொழில்களைச் செய்து வாழ்ந்தனர். அவற்றில் முல்லை நில மக்கள் கால்நடை வளர்ப்பை முக்கியத் தொழிலாகக் கொண்டு அதன் மூலம் பொருளீட்டி வாழ்ந்தனர். முல்லை நிலத்தைப் பூர்வீகமாகக் கொண்ட முல்லை நில மக்களினப்பிரிவினரில் ஆயர்கள் இன்றும் கால்நடை வளர்ப்புத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். கால்நடைகளை வாழ்வின் பெரும் செல்வமாகவும் பொருளாதார வலிமையைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாகவும் கருதும் ஆயர்கள் கால்நடைகளை வளர்ப்பதற்காக நீர்நிலைகளையும் மேய்ச்சல் நிலங்களையும் நோக்கி அடிக்கடி இடம்விட்டு இடம் நகர்ந்து வலசை போகும் அரை நாடோடி வாழ்க்கை முறையைக் கொண்டுள்ளனர். ஓரிடத்தில் நிலைத்த குடியிருப்பை ஏற்படுத்திக் கொள்ள இயலாத இவர்கள் வலசை போவதற்கும், குடிசை அமைப்பதற்கும், கால்நடைகளைப் பாதுகாப்பதற்கும் ஏற்ற வகையில் தங்கள் வாழ்வியல் முறைகளை அமைத்துக் கொள்கின்றனர்.

**கொடாப்பு**

கொடாப்பு என்பது குடை போன்ற அரைவட்ட வடிவிலானது. இயற்கையில் விலை மதிப்பில்லாமல் எளிதில் கிடைக்கக்கூடிய பொருட்களான கம்புகள், ஓலைகள், நார்கள் இவற்றைப் பயன்படுத்திக் கொடாப்பு செய்யப்படுகிறது. இவற்றில் கம்புகளைத் தூண்களாக அமைத்து முடைந்து அவற்றின் மேல் ஓலைகளை வேய்ந்து அவற்றை நார்கள் அல்லது கயிறுகளால் வரிந்து உருவாக்கப்படுகிறது. இதனைக் கொடாப்பு அல்லது கூடு என்றழைக்கின்றனர். இது தேவைக்கேற்ப பல்வேறு அளவுகளில் செய்யப்படுகிறது. ஆயர்களின் பிரிவில் ஆடுகளை வளர்க்கும் ஆட்டிடையர்கள் கொடாப்பினை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். மேலும் இவர்களிடம் தொழிலைக் கற்றுக்கொண்டு ஆடு வளர்க்கும் பிற சமூகத்தினரும் இதனைப் பயன்படுத்துகின்றனர். கொடாப்பினை ஆயர்கள் குடியிருப்புக்காகவும், கால்நடைகளைப் பாதுகாப்பதற்காகவும் என இருவகைகளில் பயன்படுத்துகின்றனர்.

**முல்லை நிலம்**

முல்லை நிலம் காடும் காடு சார்ந்த நிலமாகும். நன்கு பரந்து விரிந்த செந்நிலமாகக் கால்நடைகளை மேய்ப்பதற்கு ஏற்ற மேய்ச்சல் நிலமாக விளங்குவதால் முல்லை நிலத்தின் முதன்மைத் தொழிலாகக் கால்நடை வளர்ப்பு அமைகிறது.

பழந்தமிழர்கள் தாங்கள் வாழும் நிலத்தின் அடிப்படையில் தொழில்கள் செய்தனர் என்பதைத் தொல்காப்பியத்தில்,

**"ஆயர்வேட்டுவர் ஆடுஉத்திணைப்பெயர்**

**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"**

என்ற நூற்பா வழி அறியலாம். ஆயர், வேட்டுவர் என்பது முல்லை நிலத்தின் ஆண்களைச் சுட்டும் திணைப்பெயர்கள் இப்பெயர்கள் தொழில்சார் பெயர்கள் என்பது திண்ணம்.

**மூவகை ஆயர்கள்**

எருமை, பசு, ஆடு ஆகிய மூவினத்தை வளர்த்து அவற்றின் பயனால் வாழ்க்கை நடத்தும் ஆயர் மூவகைப்படுவர்.

1. கோட்டினத்து ஆயர் – எருமைக் கூட்டத்தை உடையவர்
2. கோவினத்து ஆயர் – பசுக் கூட்டத்தை உடையவர்
3. புல்லினத்து ஆயர் – ஆடுகளை உடையவர்

**ஆட்டிடையர்கள்**

ஐந்திணைகளில் குறிஞ்சிக்கும், மருதத்துக்கும் இடையிலுள்ள காடும் காடு சார்ந்த நிலப்பரப்பின் மேய்ச்சல் நிலங்களில் ஆடு, மாடுகள் வளர்த்தலைத் தொழிலாகக் கொண்ட ஆயர்களை இடைக்குலத்தார் என்றும் இடையர் என்றும் அழைக்கின்றனர். புல்லினத்து ஆயர்கள் ஆடுகளை வளர்க்கும் தொழிலைக் கொண்டவர்களாதலால் ஆட்டிடையர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

**கால்நடை வளர்ப்பு**

கால்நடைகள் ஆயர்களின் வாழ்வில் பெரும் சொத்தாக மதிக்கப்பட்டன. மாடு எனும் சொல் 'செல்வம்' எனும் பொருளில் குறிக்கப்பட்டுள்ளது. வீடுகள்தோறும் பெண்கள் திருமணம் முடித்துப்போகும் பொழுது சீதனமாக ஆடு, மாடுகள் வழங்கியதாக சான்றுகள் உள்ளன. இன்றும் திருமணத்திற்குப் பின் 11, 21, 31 என்ற எண்ணிக்கையில் ஆட்டிடையர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சீதனமாக ஆடுகளைக் கொடுக்கின்றனர். பெண்கள் மகப்பேறின் போது தாய்மாமன் பசுவினை சீர் கொடுக்கும் வழக்கம் ஆயர்கள் மட்டுமல்லாது பல சமூகத்திலும் வழக்கத்தில் உள்ளது. பொருளாதாரத்தைப் பெருக்கும் காரணியாகக் கால்நடைகள் இருக்கின்றன.

**கால்நடைகள் பாதுகாப்பில் கொடாப்பு**

வெயில், மழை போன்ற இயற்கையிலிருந்தும் நாய், நரி காட்டு விலங்குகளான புலி, சிறுத்தை போன்ற விலங்குகளிடமிருந்தும் கால்நடைகளைப் பாதுகாப்பதற்குப் பல வகைகளில் கொடாப்புப் பயன்படுகிறது. ஆடுகளின் இளம் குட்டிகளைக் கொடாப்பில் அடைத்து வைத்து மேற்கண்ட இடர்பாடுகளிலிருந்து காக்கின்றனர். வளர்ந்த குட்டிகளைக் காற்றோட்டமான சூழலில் வளர்ப்பதற்காகவும் அவைகளுக்கு உணவிடுவதற்கும் ஏற்ற வகையில் கொடாப்புகளைக் கவைக்கம்புகளைத் தூண்களாக நிறுத்தி அவற்றின் மீது கொடாப்பை தூக்கி வைத்து நிழற்குடையாகவும் இலைதழைகளைக் கட்டி வைக்க உதவும் தாங்கியாகவும் பயன்படுத்துகின்றனர்.

உடல்நிலை சரியில்லாத கால்நடைகளைத் தனிமைப்படுத்தி அடைக்கவும் அவற்றிற்கு உணவளிக்கவும் பயன்படுத்துகின்றனர். தனிச் சிறப்புக் கவனத்துடன் வளர்க்கப்படும் கால்நடைகளுக்குக் குடிசையாகப் பயன்படுத்தப்படுகிறது. குட்டிகளுக்குப் பால் கொடுக்க மறுக்கும் ஆடுகளையும் குட்டிகளையும் சேர்த்து வைப்பதற்குக் கொடாப்பிற்குள் அடைத்து வைத்து சேர்த்து வைக்கின்றனர். கோழிகளை அடைக்கும் கூடாரமாகவும், வளர்ப்பு நாய்களுக்கும் பிற வீட்டு விலங்குகளுக்கும் குடிசையாகவும் பயன்படுத்தப்படுகிறது.

கால்நடைகள் பாதுகாப்புக்கு இருக்கும் ஆயர்களையும் அவர்களின் உடைமைகளையும் மழை வெயிலிருந்து பாதுகாக்கும் கவசமாகப் பயன்படுகிறது. இரண்டு கவைக் கம்புகளை மட்டும் ஒன்றாகக் குவித்துக் கொடாப்பினை அதில் நிறுத்தி எளிதாகப் பயன்படுத்துகின்றனர். வெயிலும் மழையும் கால்நடைகளை அதிகமாகப் பாதிக்கக் கூடியது மேலும் நோய்களை உண்டாக்கக் கூடியது.

நாய், நரி காட்டு விலங்குகளான புலி, சிறுத்தை போன்ற விலங்குகளின் தாக்குதல் அதிகளவு பாதிப்பை உண்டாக்கக்கூடியது. இவற்றிலெல்லாம் இருந்து கால்நடைகளைக் காக்கும் ஒரே கவசமாக ஆயர்களின் கால்நடை வளர்ப்பில் கொடாப்புப் பயன்படுகிறது.

**குடியிருத்தலில் கொடாப்புகள் பயன்படும் விதம்**

கால்நடை வளர்ப்புத் தொழிலுக்காக அடிக்கடி வலசை போகும் ஆயர்கள் உடனடியாகக் குடிசை அமைப்பதற்குக் கொடாப்புகளையே பயன்படுத்துகின்றனர். வாயிலின் அருகே முதலில் இரண்டு கவைக்கம்புகளை ஊன்றிய பின்னர் தேவையான கவைக் கம்புகளை ஊன்றி கொடாப்பினைத் தூக்கி அதன் மீது வைத்து விடுகின்றனர். சுற்றிலும் ஓலைகளை வைத்து மறைத்து உடனடிக் குடிசையை எளிதாக அமைத்து விடுகின்றனர். வாயிலிற்குக் கதவினை அமைத்து வாழ்க்கையைத் தொடங்கிவிடுகின்றனர். இது போன்ற அமைப்பில் பொருட்கள் வைப்பதற்கு, குடும்பம் நடத்துவதற்கு, குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டுவதற்கு, தனிப்படுக்கை அறைகள் அமைப்பதற்கு என்று அமைத்துப் பயன்படுத்துகின்றனர். சுற்று மறைப்புகள் இல்லாமல் கவைகளை நிறுத்தி அவற்றின் மேல் கொடாப்புகளை வைத்து காற்றோட்டமான நிழற்குடைகளை அமைத்துத் தங்குகின்றனர். மேலும் இவற்றில் பரண்களை அமைத்து பொருட்களையும் பல நாட்கள் வரை இருக்கும் உணவு தானியங்களையும் வைத்துப் பாதுகாத்துக் கொள்கின்றனர். உணவு சமைக்கும் போது காற்றால் தீ அனைவதைத் தடுப்பதற்கு எளிமையாகக் கொடாப்பினை ஒரு பக்கம் மட்டும் தூக்கிக் கவைகளைக் கொண்டு தனிந்து இருக்குமாறு நிறுத்திப் பயன்படுத்துகின்றனர். பெண்கள் குளிப்பதற்குக் குளியலறைகளாக, கழிவறைகளாக, உடைமாற்றும் அறைகளாக அமைத்துப் பயன்படுத்துகின்றனர். இறைவழிபாட்டில் குலதெய்வ வழிபாட்டின் மீதும், காவல் தெய்வவழிபாட்டின் மீதும், கன்னிமார் தெய்வ வழிபாட்டின் மீதும் நம்பிக்கை கொண்ட மக்கள்

இருப்பிடத்திலிருந்து சற்று தொலைவில் தனியாக திசையை நோக்கி கொடாப்பினைக் கொண்டு குடில் அமைத்து வழிபாடுகளை நடத்துகின்றனர்.

**முடிவுரை**

ஆயர்கள் குடும்பத்தை நடத்துவற்கு தேவையான பொருளாதாரத்தைக் கால்நடை வளர்ப்பின் மூலம் பெறுகின்றனர். எனவே கால்நடைகளைச் செல்வமாகவும் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் காரணியாகவும் கருதுவதால் கால்நடைகளை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் அதிக கவனம் செலுத்துகின்றனர், கால்நடைகள் வளர்ப்பிற்கு ஏற்ற இடங்களை நோக்கி அடிக்கடி இடமாறுதல் அடைகின்றனர். இதனால் நிரந்தரக் குடியிருப்புகளைத் தவிர்க்கின்றனர். புதிய இடத்தில் உடனடிக் குடியிருப்புகளையும் தங்களுக்குத் தேவையான வசதிகளையும் அமைத்துக் கொள்வதற்குக் கொடாப்புகள் இவர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் இருக்கிறது. கொடாப்புகள் எடைகுறைவானதாகவும் எளிதில் தூக்கிச் செல்வதற்கு ஏற்றதாகவும் இருப்பதால் கால்நடை வளர்ப்பில் முக்கியப் பங்காற்றுகிறது. மழை வெயில் போன்ற இயற்கையின் தாக்கத்திலிருந்தும் நாய், நரி இது போன்ற கொடிய விலங்குகளிடமிருந்தும் கால்நடைகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படுகிறது. இளம் குட்டிகளை அடைத்துப் பாதுகாக்கும் குடிசைகளாகப் பயன்படுகிறது. இவ்வாறாக ஆயர்களின் வாழ்வியலில் கொடாப்பு பெரும் பங்காற்றுகிறது.

**தகவலாளர் பட்டியல்**

| வ. எண். | பெயர் | வயது | பாலினம் | முகவரி |
|---|---|---|---|---|
| 1. | நல்லார்.பூ., | 64 | ஆண் | காளாஞ்சிபட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல். |
| 2. | உடையம்மாள்.ந., | 59 | பெண் | காளாஞ்சிபட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல். |
| 3. | முருகவேல்.இரா., | 47 | ஆண் | தங்கச்சியம்மாபட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல். |
| 4. | வடமலை.மு., | 24 | ஆண் | தலைவாசல்புதூர், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல். |
| 5. | பூமிநாதன்.தி., | 38 | ஆண் | கணக்கன்பட்டி, |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பழநி,<br>திண்டுக்கல். |
| 6. | ஆறுமுகவள்ளி.இரா., | 29 | பெண் | திருமலைராயபுரம், ஸ்ரீராமபுரம்,<br>திண்டுக்கல். |
| 7. | செல்வக்குமார்.இரா., | 43 | ஆண் | கேதையுறும்பு,<br>வேடசந்தூர்,திண்டுக்கல் |
| 8. | முருகானந்தம்.சு., | 42 | ஆண் | வில்வமரத்துப்பட்டி,<br>விளாத்திக்குளம்,<br>தூத்துக்குடி. |
| 9. | மாரிமுத்து.க., | 37 | ஆண் | அண்ணாமலை நகர்,<br>விளாத்திக்குளம்,<br>தூத்துக்குடி. |
| 10. | கந்தசாமி.பூ., | 69 | ஆண் | வைகாசிபட்டி,<br>பாலமேடு,<br>மதுரை. |

**துணையன்கள்**

1. தனஞ்செயன்.ஆ., தமிழில் இலக்கிய மானிடவியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2014.
2. சுந்தர ஆவுடையப்பன்., ஐந்திணை வாழ்வியல், குமரன் பதிப்பகம், சென்னை, 2021.
3. சண்முகம்பிள்ளை.மு., சங்கத் தமிழர் வாழ்வியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.